THE CENTRAL LAW COLLEGE, LIBRARY, SALEM-636 008.

Register No. | | | | | | | | |

**TA4C** **5861-23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine the Powers of the Government to refer an industrial dispute for adjudication.

   தொழிற்துறை சச்சரவுகளை கட்டாயத் தீர்ப்புமுறைக்கு சாட்டி அனுப்புதலுக்கான அரசின் அதிகாரத்தை கூர்ந்தாய்வு செய்க.

2. Explain about the procedure for registration of a Trade Union? What are the circumstances in which the Registrar can cancel the registration?

   ஒரு தொழிற்சங்கத்தை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் பற்றி விளக்குக. எந்தெந்தச் சூழ்நிலைகளில் தொழிற்சங்கப் பதிவு பதிவாளரால் ரத்து செய்யப்படலாம்?

3. Explain the procedure for fixing and revising minimum wages under the Minimum Wages Act, 1948.

   1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியங்கள் சட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கின்ற மற்றும் மாற்றியமைக்கின்ற முறையினை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define "Workman" under the Industrial Disputes Act, 1947. Examine the tests evolved by the Courts to determine master and servant relationship.

   1947-ம் ஆண்டு தொழிற்துறை சச்சரவுகள் சட்டத்தின்கீழ் "பணியாளர்" என்பதை வரையறை செய்க. எஜமானருக்கும் ஊழியருக்கும் உள்ள உறவை தீர்மானிப்பதற்கு நீதிமன்றங்களால் படிப்படியாக உருவாக்கப்பட்ட தகுதிச் சான்றுகளை ஆராய்க.

5. How the timely payment of wages had been ensured under the Payment of Wages Act, 1936?

1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டம் உரிய காலத்தில் ஊதியம் வழங்குதலை எவ்வாறு உறுதிப்படுத்துகிறது?

6. Define Standing Orders. State the procedure for Certification of Standing Orders.

நிலையாணைகள் என்பதை வரையறு. நிலையாணைகளை சான்றளித்தலுக்கான நடைமுறைகளை குறிப்பிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Lay off

நிறுத்தி வைத்தல்

(b) Settlement

தீர்வு

(c) Collective Bargaining

கூட்டுப் பேரம்

(d) Wage Board

ஊதிய வாரியம்

(e) Strike

வேலை நிறுத்தம்

(f) Works Committee

பணிக்குழு

(g) Protected Workman

பாதுகாக்கப்பட்ட தொழிலாளி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:

8. An employer declared lay off to his workmen and offered them alternate employment in his branch office situated at 10 km away from his main factory. The workers refused to accept the work and claimed lay off compensation. Decide.

பணியாளர் ஒருவர் தனது தொழிலாளர்களை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்து அதற்கு பதிலாக 10 கி.மீ. தொலைவில் இருக்கும் தனது கிளை அலுவலகத்தில் வேலை செய்யப் பணிக்கிறார். தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்து நிறுத்தி வைத்தலுக்கான இழப்பீடு கோரினார்கள். முடிவு காண்க.



9. Ten workmen of the textile mill applied for registration of a newly formed Trade Union to the Registrar of the Trade Unions. While the application for registration was pending, four of them resigned their Job. The Registrar permitted registration of the Trade Union. Decide.

நூற்பாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த பத்து தொழிலாளர்கள் தாங்கள் புதிதாக அமைத்த தொழிற்சங்கத்தினை பதிவு செய்வதற்காக தொழிற்சங்க பதிவாளருக்கு மனு செய்திருந்தனர். அம்மனு பரிசீலனையில் இருந்த போது அவர்களில் நான்கு தொழிலாளர்கள் தங்கள் வேலையினை ராஜினாமா செய்தனர். பதிவாளர் தொழிற்சங்கப் பதிவினை அனுமதித்தார். முடிவு காண்க.

10. While working on a machine, a worker accidentally drops a valuable testing appliance which is broken. The employer deducts the value of the appliance from the wages of the worker. Whether the deduction is justified?

தொழிலாளி ஒருவர் இயந்திரத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும்போது எதிர்பாராமல் ஒரு விலையுயர்ந்த பரிசோதிக்கும் கருவியை தவறி கீழே போட்டு விடுகிறார். அது உடைந்து போகிறது. அந்தக் கருவியின் விலையை பணியாண்மையர் தொழிலாளியின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்கிறார். அந்தப் பிடித்தம் நியாயமானதா?

———————